*Subscription*
Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS
*Apply to:*
**The Manager,**
Morning Star', Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/64/News/87*

Established: 1841: A Christian Weekly: Published Every Friday

Vol. 148 JAFFNA, FRIDAY, 10th JUNE 1988. No. 11

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**UNDELIVERED ISSUES**
Please re address all undelivered issues of the Morning Star to:
**The Manager,**
" Morning Star ",
Vaddukoddai.




## Hartley College

*( One hundred and fifty years of Educational Service)*

Hartley Ceylon, a Methodist based but now a Goverment School which has produced over the years eminent scholars and scientists of the calibre of Professor C. J Eliezer and Dr. S. Shanmugathasan is celebrating its 150th anniversary this year.

This School was founded in 1838 by the highly renowned educationist Rev Dr Peter Percival who compiled the first English – Tamil Dictionary and was Professor of Tamil at the Madras University on the salubrious shores of Pt Pedro) It owes its name to Rev Hartley the Secretary of the Methodist Missionary Society for the East who visited the School during the Principalship of the late Mr. C. P. Thamotheram (1915–1943) It was Mr Thamotheram who raised the status of the school to an exalted level by finding the land putting up school buildings including the hostel and presenting pupils to the Cambridge Senior Examination at which pupils did very well The Principal from 1943 to 1967 Mr K. Pooranampillai was responsible for the excellent results the College produced consistently at the University entrance examinations. He also had the school and the play ground extended introduced several co-curricular activities modernized the school and made it shine in Cricket and Athletics at national level. During the Principalship of Mr. W. N. S Samuel (1975 — 1985) two new buildings came up, the Thamotheram Memorial Science block and the Pooranampillai block. A survey conducted two years back by the Ministry of Education of the G. C. E. (A L) results examinaiion during the previous ten years revealed that Hartley had produced the second best results in the Island. It was when the school was on its way to more and more glory that disruption took place. But even at the 1987 G. C. E. (A L) Examination it came out fourth best although working under very adverse conditions in borrowed premises two miles away from its own, and without library, laboratory or play ground. During the violent struggles between the Sri Lankan Army and "the boys" the library containing several thousand books was burned (1-1-1984) the laboratory despoiled and most of the buildings damaged. As the school had come within the prohibited security zone and the army occupied parts of it, it had to be shifted in May 1985 to the relatively trouble free village of Puttalai three miles away, where semi — permanent buildings were put up to accommodate it. For nearly a year the school functioned with only a half wall separating it from the army camps Now that the Sri Lankan army has moved out of Point Pedro steps have to be taken to shift the school back to its original premises where a new Hartley is bound to rise up Phoenix like under the aegis of the present Principal Mr S. P. Balasingham. The 150th year celebration will be taking place with the active collaboration of the past pupils association in Point Pedro The Colombo branch and the London branch will follow suit.

— Old Boy

C. S. I. Synod 1988

## Excerpts from the General Secretary's Report

*( Continued form our last issue )*

**Sharing the gift of Freedom and Deliverance from Evil**

'Where the Spirit of God is Lord, there is Freedom' declared St Paul Another version of the same text reads, 'where the Spirit is Lord, there is Liberty'. These concepts of Freedom and liberty are associated with the work of the Holy Spirit and hence are to be shared as gifts with all those who are denied or deprived of their basic human rights and liberty of life So when we pray to Our Father, '*us* not into temptation, but deliver *us* from evil', we desire and long for the gifts of Freedom and Liberation, not only for the self, but indeed for all of *us* who are part of the family and accepted by 'Our Father in Heaven'. In His parable of the Last Judgement. Our Lord Jesus included those victims of oppression and bondages of all kinds when He challenged their fellow humans saying, 'I was in prison, but you did not visit me'. In fact, He went on further to own these victims as His own blood brothers and sisters — thus acknowledging them to be the children of His 'Father in Heaven'. So He would insist, 'Whatever you did not do for the least of these my brothers and sisters, you did not do for me' (Matt, 25:31-46).

Hence, Liberative action or what I would call *Liberation Ministries* are certainly inextricable part of Christ's mission and therefore of all His followers and disciples in the Church everywhere In the past two years under review how far such Liberation Ministries were undertaken in our Church as a whole? With joy and humility, I can report of increasing involvement in Human Rights and 'Justice to the Oppressed' Ministries by several of our Dioceses and groups of Christian members around the CSI region.

Most obviously of course, the great work done in Jaffna Diocese in Sri Lanka in the midst of continuing conflict and deepening crisis, needs to be acknowledged and supported by the whole Church. Ever since the Ethnic Riots began in 1983, Bishop Ambalavanar and his colleagues in Jaffna had gone about organising Rehabilitation for thousands of displaced Tamil Victims Relief and providing housing and even alternate employment opportunities to several hundred families. In the process the families of the Bishop and scores of other Church workers in that Diocese, had to suffer many kinds of personal loss and pains not to mention the anxiety deriving from suspicion and misunderstanding their role by fellow Christians from other parts of Sri Lanka

At the 1984 Synod at Secunderabad, a new Synod level *Commission for Study and Action on Caste issues* was set up, with particular concern for supporting Christians of Scheduled Castes Origin in their struggle for liberation towards Human community. Under the efforts of this Synod Commission some Educative Literature has been published in Telugu and in English during last year. But a matter of particular satisfaction is that we were able to raise almost ten lakhs of rupees as Endowment Fund for the support of Christians of Scheduled Castes Origin, during the biennium with contributions from five of our own Dioceses and generous support from our CSI-RMC partners With the interest earned on this fund, about one lakh rupees will become available each year to award Scholarships for Leadership Development from the most needy members of the CSCO. From this year on, this scheme will become operative.

### At Rest

**Mr. E. V. Ponnuthurai**

*Ernest Velupillai Ponnuthurai* (87) brother of Mr. S. J. V. Chelvanayagam Q. C. of revered memory, passed away at Tellippalai on 5-6-88. The Funeral Service took place at his residence at Tellippalai on Monday 6-6-88 at 3 30 p. m.

The Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the Jaffna Diocese of the C. S. I. conducted the service, assisted by Rev. Chris to Reberts, Presbyter of the Tellippalai Church, Rev. K P. Govindarajah of St. Peter's Church, Jaffna, Rev. D. C Ratnasingham and Sevak Rev. Sam Alfred. The grand children of Mr Ponnuthurai sang a Special song. The Bishop preached the Sermon and paid the tribute.

The committal rites were performed at the Tellippali Church burial grounds by Rev. Christo Roberts and Sevak Rev. Sam Alfred.

He leaves behind besides his wife Nesamalar, daughters Mahil, Kirupai, Sugunam, Punitham and Chandra and son Karunakaran.

## Lay Training Programme

The Institute for Evangelists and Lay Training (IELT) of Maruthanamadam Chunnakam organized a Lecture and Seminar on "The History of the Roman Catholic Church in Sri Lanka" by Rev. Fr. J. E Jeyaceelan, Vice Director of the St. Francis Xavier Seminary of Colombagam on Saturday the 4th June 1988. About 35 people belonging to various denomination participated in this Seminar. Second part of this feature will be held on Saturday the 18th June 1988. These Seminars are useful for the lay leaders who are involved in the Church Ministry.

### Wedding

**Visvalingam — Mills**

The marriage of *Dr. Chrishanta Binojan* formerly of Green Memorial Hospital Manipay, to *Anusha* daughter of Dr. and Mrs. Amirtham Mills of Sydney took place recently at the Church of St. Paul Milagiriya.

A well attended reception was held at the Hotel Oberai Colombo.

## IN MEMORIAM

IN TREASURED MEMORY
OF
**Dr. Samuel Gunaratnam Luther**

Departed: 27th May 1987

*"I have fought the good fight,*
*I have finished the race,*
*I have kept the faith."*
2 Tim. 4 — 7.

Remembered with deep love by his loved ones.

A service of remembrance and thanksgiving will held at St. John the Baptist Church Chundikuli on 18th June 1988 at 9 a. m.

Presence of friends and relations will be deeply appreciated.

## IN MEMORIAM

CHERISHED MEMORIES
OF
**Elizabeth Selvapoornam**
19-12-1901 — 14-06-1977
AND
**Rev. K. E. Thambyrajah**
24-11-1896 — 28-07-1932

*Thine for ever? Oh how blest*
*They who find in thee, their rest.*

Remembered with love and gratitude.

" Chrislone ",
Kurunegala.

# உதயதாரகை

UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது
நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 148] 10-6-1988 [இதழ் 11

## செய்திகள்

### பாப்பரசரின் திருவுடல் எங்கே?

இத்தாலியில் உள்ள ஒரு தேவாலயத்தில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த கத்தோலிக்கப் பாப்பரசரின் திருவுடலை சமீபத்தில் திருடர்கள் எடுத்துச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

### பார்கின்சன் நோய்க்கு மருந்து?

அமெரிக்க குத்துச் சண்டை வீரர் முகம்மது அலி, பார்கின்சன் நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். இந்நோய் தொற்றியதும் உடல் இயக்கம் பாதிக்கப்பட்டுவிடும். அதாவது கண்ணை மூடவும், விரலை அசைக்கவும் மூளையில் இருந்து உத்தரவு வந்தாக வேண்டும் அப்போதுதான் அவை அசையும்.

மூளை இதற்கான உத்தரவை இடாவிட்டால், அல்லது உத்தரவில் குளப்பம் ஏற்பட்டால், உடல் உறுப்புகளின் அசைவில் குறைபாடு காணப்படும். சில சமயங்களில் எவ்வித அசைவுமே இருக்காது.

இந்நோய்க்கு ஏற்ற மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை மருத்துவ நிபுணர் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். சமீபத்தில் லண்டன் டாக்டர்கள் இரு பார்கின்சன் நோயாளர்களுக்கு மூளை-அறுவை சிகிச்சை செய்தனர். இந் நோயாளியின் உடல் நிலையில் நல்ல மாற்றம் காணப்பட்டதாகத் தெரிகிறது.

### குழந்தைகள் வேலை செய்யும் நிர்ப்பந்தம்

இந்தியாவில், சட்டப்படி குழந்தைகளை படிக்கவிடாமல் வேலைக்கு அமர்த்துவது குற்றம், இருந்தும் இப்போ அங்கு 1 கோடி 80 இலட்சம் குழந்தைகள் வேலை செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவர்களிற் பெருந்தொகையினர் - ஐந்து வயதுக்கும் பதினொரு வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள்.

இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குள் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை பல கோடிகளைத்தாண்டும். இதனால் குழந்தைகள் தொழில் செய்வதை சட்டப்படி தடுத்துவிட முடியாது என்கிறார் ஏனெனில், பல குடும்பங்கள் இக் குழந்தைகளின் வருமானத்தை நம்பி இருக்கின்றன.

### வெள்ளைக்கொடி ஏற்றுவோம் அமைதி வேண்டி

சரணாகதி என்ற பேச்சுக்கு இடந்தராது தன்மானத்தோடு போராளிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்க போர் நிறுத்தம் கோரி சமாதானத்தில் நீதியான நிறைவுடன் கூடிய அமைதியை வேண்டி சகல தமிழ் மக்களும் எதிர்வரும் புதன்கிழமை வாகனங்கள், கட்டிடங்களில் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு, உடைகளில் வெள்ளைப் பட்டி அணிய வேண்டுமென சி. வி. கே. சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார். இந்திய அமைதிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்த பகிரங்கமாக முயற்சித்து வரும் யாழ். மாநகர ஆணையாளர் சி. வி. கே. சிவஞானமே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். பொது நிறுவனங்களின் ஆதரவு உறுதியளிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

### பப்பாளிப் பழம் உடல் நரம்புகள் வலுப்பெற உதவும்

நம்மிற் பெரும்பாலோர் பப்பாளிப் பழத்தைக் கவனிப்பதில்லை, மாம்பழத்தை அதிகவிலை கொடுத்து வாங்குகிறார்கள்! மாம்பழத்தைவிட பப்பாளிப் பழம் ஐந்து மடங்கு 'சூடு' குறைவானது. நாள்தோறும் பப்பாளிப் பழத்தை உண்பது நம் உடம்பிற்கு நல்லது. ஆப்பிள் பழத்தைப் பார்க்கிலும், பப்பாளிப் பழத்தில் அதிக உயிர்ச்சத்துக்கள் உள்ளன, கண்பார்வை தெளிவடையும், நரம்புகள் வலுப்பெறும் தசைகள் கட்டு சக்தி பெறும்.

### பெந்தெகொஸ்து செபவிழா

ஆண்டுதோறும் நடைபெறும் செபவிழா, கடந்த மே மாதம் 20ஆம் 21ஆம் திகதிகளில் ஆச்சிரமத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் வேத வகுப்புகள், செபக்குழுக் கூட்டங்கள் வாலிபர் கூட்டம் ஆகியன நடைபெற்றன. இவ்விழாக் கூட்டங்களில அருள்திரு. J. சர்வானந்தன் அருளுரைகள் வழங்கினர். அருள் திரு A. W. செபநேசன் வாலிபர்களுக்கு சிறப்புச் சொற்பொழி வாற்றினர். அருள்திரு D. C. இரத்தினசிங்கம் திரு விருந்து ஆராதனையை நடத்தினர். அருள் திரு I' செல்வரத்னம் வேதப் படிப்பை நடத்தினர். பிரதம சேவக் அருள் திரு. சாம் அல்பிறட் அவர்களின் செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் விழா இனிது முடிவடைந்தது.

## பெண்கள் பற்றிய பொன்மொழிகள்!

❋ கணவனின் குரலைவிட மனைவியின் குரல் பெரிதாகக் கேட்கும் வீட்டில், மகிழ்ச்சிக் கதவு அடைபட்டுப்போகும்.

— (சைகு ஷா அதி.)

❋ மனைவியை ஏமாற்ற வேண்டும் என்று நினைப்பவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான்.

— (நிஸ்வானு மஜீத)

❋ பெண்களால் இரகசியத்தைக் காப்பாற்ற முடியாது என்பார்கள் இது தவறு ஒரு பெண் எவ்வளவுக்கு எவ்வளவு மதிப்புக்குரியவளாக இருக்கிறாளோ, அவ்வளவுக்கு அவளிடம் இரகசியம் புதைந்து கிடக்கிறது.

—( ஆஸ்டின் ஒவல்லா )

## திருமணம்

### ஜெயா — மைதிலி

மெதடிஸ்த மிஷன் போதகரும், மானிப்பாயில் வசிக்கும் திரு / திருமதி C. N. மேதர் அவர்களின் மகனுமாகிய அருள் திரு. பேர்ட்றம் ஜெபகுமார் மேதர் அவர்களுக்கும், காலஞ்சென்ற திரு. R. K. தியாகராஜா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திருமதி L. C. தியாகராசா அவர்களின் மகளுமாகிய செல்வி ஸ்டெல்லா மைதிலி அவர்களுக்கும் யாழ் புனித பேதுரு மெதடிஸ்த தேவாலயத்தில் திருமணம் நிறைவேறியது.

திருமண ஆராதனை சபைப் போதகர் அருள் திரு. K. P. கோவிந்தராஜா அவர்களால் நடத்தப்பட்டது. இலங்கை மெதடிஸ்த மிஷன் தலைவர் அருள் திரு. ஹறல்ட் பேர்னுக்கோ அவர்கள் திருமண பிரார்த்தனையை நடத்தினர். மெதடிஸ்த மிஷன் செயலாளர் அருள் திரு. K. T. முத்தையா அவர்களால் இறுதிசெபமும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. மணமகளின் சகோதரனும் மாங்குளம் C. S. I. சபையின் போதகருமாகிய அருள்திரு D. S. தியாகராசா அவர்கள் மணமக்களுக்கு நல்லுபதேசம் வழங்கினர்.

ஆராதனையின் பின் ஞானப்ஸ் ஹொட்டலில் விருந்துபசாரணை நடைபெற்றது.

### வடக்குடன் கிழக்கு மாகாணத்தை இணைப்பதற்கு முஸ்லிம் எதிர்ப்பு!

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து ஒரு மாகாண சபையை அமைப்பது என்ற இலங்கை இந்திய ஒப்பந்த ஏற்பாட்டிற்கு, கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் மீண்டும் தமது பலமான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

## வேதாகமச் சங்கீதங்கள்

-: கவிதை வடிவம் :-

நவாலியூர் சி. என். செல்லத்துரை

சங்கீதம்-:38

(முற்றொடர்)

| | | | |
|---|---|---|---|
| 9, | எந்தனது | தேகசுகம் | வேண்டியே |
| | | —இறைவா— | |
| | உனையழைத்தேன் | நீ அதனை | வென்றியே |
| | அறிந்திருப்பாய் | அத்துடனே | எந்தனின் |
| | | —தவிப்பும்— | |
| | நீயறிவாய் | உன்னுடைய | சிந்தையில் |
| 10 | எனதுநாடி | படபடென்று | அடித்தது |
| | | —அதனால்— | |
| | உள்ளம்கூட | கடகடென்று | இடித்தது. |
| | என்னுடைய | மாபலமும் | எந்தனை |
| | | —விட்டு— | |
| | விலகியதால் | எந்தனது | கண்களைப் |
| | போர்த்திருந்த | பார்வைகூட | வேரற்றுப் |
| | | —போகும்— | |
| | நிலையிலிங்கு | வாடுகின்றேன் | நான்கெட்டு |
| 11. | எந்தனோடு | நெருங்கிவாழ்ந்த | தோழரும் |
| | | —என்னில்— | |
| | நேசம்வைத்து | வாழ்ந்துவரும் | மாந்தரும் |
| | எனதுவாதை | கண்டுஎன்னை | விலகினர் |
| | | —எந்தன்— | |
| | இனத்தவரும் | என்னைவிட்டு | விலகினர் |
| | என்குடும்பம் | கூடஎன்னை | வெறுத்தது. |
| | | - எந்தன் — | |
| | நோய்கள்கண்டு | விலகித்தூரச் | சென்றது |
| 12. | இத்தகைய | வேளையிலே | எந்தனின் |
| | | —பகைவர்— | |
| | என்னைக்கொலை | செய்வதற்குத் | தங்களின் |
| | சதிஅனைத்தும் | தீட்டுகிறார் | தீட்டியே |
| | | —பெருங்— | |
| | கண்ணிவைத்து | என்னைஅதில் | மாட்டியே |
| | அழித்துவிட | முனைகிறார்கள் | ஆகவே |
| | | —தமது— | |
| | நேரமெல்லாம் | செலவிடுவர் | வேகமே |

(வளரும்)

### தாரகை ஒளி

துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடவாமலும்,
பாவிகளுடைய வழியில் நில்லாமலும்,
பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும்,
கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து அதை இரவும் பகலும்
தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்.

சங் 1 : 1

# எங்கள் கருத்து

## திருமறைப் படிப்பு

நமது வாழ்வை வளம்படுத்த, உயிரளிக்கும் உணவாயும், வழிகாட்டும் ஒளியாயும் திகழ்வது நமது "பரிசுத்த வேதாகமம்" (விவிலியம் — பைபிள்) எனப்படும் திருமறை நூலே.

இம் மறை நூல் நம்மைக் கிறிஸ்தேசுவிலுள்ள விசுவாசத்துடன் மீட்பிற்கு அழைத்துச் செல்லக் கூடிய ஞானத்தை அளிக்க வல்லது. இத் திருநூலில் எழுதப்பட்ட அனைத்தும் நமது ஆன்மீக வாழ்க்கைக்காகவே இறைவனின் ஏவுதலால் எழுதப்பட்டன.

திருமறை நூல் நம் மீட்பைப்பற்றிய நூல். இதில் நாம் காணவேண்டியது கிறிஸ்து. இதன் விளக்கத்தை நமக்களிப்பவரும் அவரே. கிறிஸ்து பெருமானைக் குறித்து, அவரின் மீட்பின் பணியைக்குறித்துச் சான்று பகரும் இம் மறைநூலைத் தூய ஆவியரின் துணைகொண்டு தெளிவுறக்கற்று, எம்பெருமானின் திருச்செயலை நன்கறிதல் அவசியம்.

துன்பமும் ஏமாற்றமும் நிரம்பிய இவ்வுலகவாழ்க்கையில், நாம் அளவிட முடியாத ஆறுதலையும், மன அமைதியையும், வேறெந்த நூலும் தராத வகையில் இம் மறை நூல் நமக்களிக்கின்றது.

சில வேளைகளில் நம்மை ஊக்குவிக்கும் வகையிலும், மற்ற வேளைகளில் நம்மைத் திருத்தும் வகையிலும் இறைவனின் வார்த்தை இம் மறை நூல் வழியாக நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. நம் ஆன்மாவிற்கு ஒளியூட்டும் உண்மைகளையும், உள்ளத்திற்கு உரமூட்டி அமைதியை அளிக்கும் அரும்பகுதிகளையும் இந் நூலில் நாம் காணலாம்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய திருத்தங்களைக் காட்டுவதோடு, நமது தீய குணங்களைத் திருத்துமுகமாக நம்மைக் கண்டித்துச் சீர் திருத்தி, நற்போதனையளித்து நீதியின் பாதையில் நடத்தத்தக்க தலைசிறந்த நூலே நமது திருமறை நூல்.

நமக்கு மட்டுமல்ல, உலகமாந்தர் அனைவர்க்கும் பயனளிக்கும் பொது மறையே நமது திருமறை ஆதி தொட்டு கிறிஸ்தவ சமுதாயப் பண்பாட்டின் ஆணி வேரையும், விசுவாசத்தின் அடிப்படையாகவும் திருமறை திகழ்ந்ததென்பது வரலாறு கண்ட உண்மை.

இம்மாபெரும் மாண்புகளைக்கொண்ட நம் திருமறை நூலை நாம் வாசித்துத் தியானித்துப் பயன்பெற முயல்வது இன்றியமையாததாகும். திருச்சபையில் மறுமலர்ச்சி உண்டாக்கத் திருமறையை வாசிப்பதும் தியானிப்பதும் அவசியம். இம் மறைநூலை ஆராய்ந்து படித்தல் அவசியம். தங்கம் தரை மட்டத்தில் கிடைப்பதில்லை. ஆளமாகத் தோண்டித்தான் அதனை எடுத்தல் வேண்டும். அதுபோல, ஞானச்செல்வம் கிறிஸ்துவில் மறைந்து கிடப்பதால், நாம் உண்மையான வாஞ்சையுடன் ஆராய்ந்து தேடினுல்தான் அச்செல்வத்தைக் கண்டடைவோம் நமக்கு முடிவில்லா வாழ்வும் அங்கிருந்துதான் தொடங்கும். இவ் வாழ்வைத் தருபவர் கிறிஸ்துவின் ஆவியரே. ஆகவே இப் பெருவாழ்வை அடைவதே, அதாவது கிறிஸ்து பெருமானை நம்முள்ளத்தில் அடைவதே, மறைநூலை ஆராய்ந்தறிவதின் நோக்கம்.

திருமறையை செபத்தோடும், திறந்த மனத்தோடும் படிக்க ஆரம்பித்தால் சத்திய ஆவியர் நம்மை விசுவாசவாழ்வு வாழ்ந்து கிறிஸ்து பிரானை அறிந்துகொள்ளும் நிலைக்கு வழி நடத்துவார். ஒழுங்காகவும் மனத்திட்பத்தை இழக்காமலும் திருமறையைப் படித்துவரும்போது, இறைவனின் ஆவியர் அதன்மூலம் நம்முடன் பேசுவார். இறைவனின் திட்டங்களையும் தீர்மானங்களையும் நமக்கு எடுத்துக்காட்டுவார். அவற்றிற்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியத்தையும் விளக்குவார்.

திருமறையைப் படிப்பதும், அதன் கருத்துக்களை வாங்கிக் கொள்வதும் எளிதல்ல. இதில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் ஒழுக்க நெறிகளையும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் நமது சபையாரிற் பலர் இருக்கின்றனர் ஆகவே, நமது சபையார் தகுந்த உதவியுடன் திருமறையைப் புரிந்து கொள்வதற்காக நமது சபைகளில் ஒழுங்காகத் திருமறை வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும்.

திருமறையை நன்கு பயின்றுவரும் சபைதான் உயிர்ப்படைந்து தனது திருப்பணி விடைகளைத் தகுந்த முறையில் ஆற்ற முடியும். அத்துடன், இந்நாட்களுக்குரிய செய்தியை இறைவன் திருமறைமூலம் தருவதையும் அறிய முடியும்.

## புரட்டஸ்தாந்து மதமும் அதன் பிரிவினை வாதிகளும்

—B. ஜெயராஜ்
(மூன்றொடர்)

அத்துடன் குருமார் பற்றாக்குறையிருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட சபைகள் கொடுக்கப்பட்டுள்ளதும் இதற்கான ஒரு காரணம். இந்நிலைமை முக்கியமாக மக்களிடையே மன நிறைவற்ற நிலையை உண்டாக்குகிறது.

3. ஜெபக்கூட்டம், வேதப்படிப்பு, ஞான ஒடுக்கக் கூட்டங்கள் திருச்சபைகளில் போதுமான அளவு வளரவில்லை. இதனுல் சமய உணர்வுக்குப் போதிய ஊக்கம், தற்காப்பு போதாமலிருக்கின்றது. இதற்குச் சில குருமார்கள் கூறலாம் நாங்கள் இப்படியான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தால் சபையார் வருகிறார்களில்லையே என, ஆனல் பிரிவினைவாதிகளின் நிகழ்ச்சிகளுக்கு ஏன் நமது சபையார் செல்கிறார்கள் என்பதற்குக் காரணமென்ன?

4. நமது திருச்சபையின் அமைப்பு, எப்படியெனில் பிரதான மேய்ப்பர்களாகிய ஆயர்மார் ஆத்தும வழிகாட்டிகளாக இராமல் நிர்வாக தலைமையாளர்களாக இயங்க வேண்டியுள்ளது.

கத்தோலிக்க சமயக் கொள்கைகளை எதிர்த்ததன் விளைவாக புரட்டஸ்தாந்து மதம் தோன்றியது. இதனுலுண்டான பிரதான தீமை யாதெனில் ஒவ்வொருவரும் வேத வாக்கியங்களுக்கு, தங்களுக்கு ஏற்றபடி விளக்கம் கொடுத்து, மேலும் மேலும் நம்மிடையே பிளவு ஏற்பட்டது தான் அல்லது ஏற்பட்டுக்கொண்டு போவதுதான். நான் இவ்விதமான ஒரு பிரிவினைவாத கூட்ட முக்கியஸ்தர் ஒருவருடன் பேசக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நான் கேட்டேன் மந்தைகளைப் பீடிக்கும் நோய்களைப்போல ஏன் எமது சபையாரைக் குழப்புகின்றீர்கள் என்றேன். அவர் சொன்னபதில் என்னைத்திடுக்கிடவைத்தது. 'உங்களின் நிலத்தில் மேச்சல் போதாமல் இருப்பதால்தான் எமது நிலத்துக்கு ஆடுகள் வருகின்றன' இது யார் செய்த குற்றம்? என்றால் வேறு அனேகவிஷயங்களை ஆராய்ந்தோம் முடிவில் அவர் எனக்குச் சொன்னது "தம்பி புதுத் தும்புக்கட்டு நன்றாக் கூட்டும் அது தேய்ந்து பழைய நிலைக்கு வராதபடி உம்மைப் பார்த்துக் கொள்ளும்" என, எய்தவன் இருக்க அம்பை நொந்து பிரயோசனமில்லை.

இன்னொரு முறை எமது சபையிலிருந்து அவர்களை சென்றடைந்த ஒருவரைச் சந்தித்தேன். அவரைக்கேட்டபோது, 'நான் அங்கு இயேசு கிறிஸ்துவை மிகவும் பக்தியுடன் வணங்கக்கூடியதாக உள்ளது' என்கிறார்.

அடுத்தமுறை வெளிநாட்டிலிருந்து உதவியொன்றையும் பெறாத ஒரு பிரிவினைவாத சகோதரனைக் கண்டுகேட்டேன், எப்படி நீங்கள் சபையை வெளிநாட்டு பண உதவியில்லாமல் நடத்துகின்றீர்கள் என அவர் சிரித்துவிட்டு தம்பி உங்கள் மிஷனரிமார் உங்களைப் பழுதாக்கிவிட்டார்கள். நீங்கள் அவர்களிடம் வாங்கி வாங்கிப்பழகிவிட்டீர்களே ஒழிய இன்னும் ஒருவருக்குக் கொடுத்துப் பழக்கம் இல்லை. எங்களின் வழிபாட்டிடத்துக்கு வந்து பாரும் உங்களின் சபைக்கு வருபவர்களைவிட அந்தஸ்தில் குறைந்தவர்கள் தான் வருகிறார்கள். ஆனல், ஒரு வித்தியாசம், இவர்கள் தாராளமாகக் கொடுக்கிறார்கள். உங்களின் ஆட்சிக்கு இன்னும் யாராவது கொடுத்தால் வாங்கும் மனநிலை மாறினுல் தான் விடிவு வரும் என்கிறார், இன்னும் அதிகம் சொன்னார் எழுத மனம் கூசுகிறது. இவைகள் ஒரு புறமிருக்க இக்குறையை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும். என சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

(வளரும்)

### அளவெட்டியில் வாலிபர் பாசறை

கடந்த மாதம் 30, 31ஆம் திகதிகளில் அளவெட்டி சி எஸ். ஐ. ஆலய வளாகத்தில் வாலிபர் பாசறை நடைபெற்றது. அளவெட்டிச் சபை ஊழியன் சகோதரன் ஏர்ள் பி. சொலமன்ஸ் ஆரம்ப ஆராதனையை நடத்தி இப் பாசறையை துவக்கி வைத்தார்.

அருட்திரு டி ஆர். அம்பலவாணர் அவர்கள் "இயேசு அழைக்கிறார்" என்ற பொருளில் இரண்டு வேதப்படிப்புகள் நடத்தினர். சகோதரன் ஏர்ள் சொலமன்ஸ் "தூய ஆவியரின் திருச்செயல்கள்" என்ற பொருளில் இரண்டு அருட்செய்தி விரிவுரைகளை நிகழ்த்தினார். "இன்றைய இந்து சமயக் குரவர் இயக்கம்" என்ற பொருளில் விளக்கவுரை வழங்கினர்.

இப்பாசறையில், பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், சத்தியபுரம், அளவெட்டி, உரும்பிராய், கோப்பாய் ஆகிய சபைகளிலிருந்து ஏறக்குறைய நாற்பது வாலிபர், யுவதிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அளவெட்டிச் சபையார் இப் பாசறை சிறப்பாக நடைபெற ஒன்றுபட்டு உழைத்தமை பாராட்டுக்குரியது.

*EDITORIAL*

## The Contemporary Political Scene

**The First Chapter Concludes**

Sri Lanka has slogged through its round of Provincial Council elections in the Central and Western and Southern Regions, exactly seAen years away from the District Development Council Elections in 1981.

In the second round, out of a total of 153 seats the *UNP* won 87, the *USA* 60 *the Muslim Congress* 9 and the *Liberal Party* (which contested only in the Western Province won two seats). Of importance in this context is the claim of the Muslim Congress leader that his party has annexed over one lakh of votes, which would strengthen its potential as a bargaining power, in future.

But the elections have exhibited hardly a propitious panorama for PEACE. The second round which took place on 2-6-88, registered a record wave of 165 acts of violence within 48 hours — burning of buses and lorries, flinging of boms, setting fire to AGA's offices etc., etc.

The panorama of violence apart, the character of the polls has reflected very strong head winds in the political climate of the country. The percentage of registered votes cast was only 61 per cent for the Western Province and 56 per cent for the Central Province The announcement by President Jeyawardene at Tangalle [through a written note handed over to Minister Gamini Dissanayake who deputised for the President at an election meeting,] that he would investigate thoroughly all alleged illegal acts reported of the UNP, adds a new dimension to the political imbroglio.

Well calibrated warnings were also been given for the Southern Region Provincial Council elections with the reported killing of two candidates, one a United Socialist Alliance candidate and the other an Independent. Incidents of arson and other acts of violence were been reported from Deniyaya, Welapanawa and Passara in the deep South.

As we go to print, the battle of nerves has concluded, in the Southern Province Four provincial councils were elected on 28-4-88 Two more were born on 2-6-88 and the seventh has seen the light of day on 9-6-88 Will the new arrivals put an end to the southern insurgency and open up new vistas for the smooth working of the polls in the North and Eaat? The future remains a perplexing maze.

**Enigmatic Features**

In the meanwhile, the killings uurelated to the polls, point to the impenetable tangles the government has to meet in its gargantuan task of restoring PEACE in a land, torn asunder by party and factional feuds. TELO's Colombo leader was reported shot dead on 3-6-88 and the Additional Magistrate of Vavuniya on 4-6-88.

"*Curioser aad curioser*", the quaint phrase from "Alice in wonderland" has been aptly quoted by a writer in "*Tamil Times*" of London to describe the comtemporary political situation in Sri Lanka.

In an aggravating exercise, as polling in a turbulent political climate, *the spoilt votes* cannot be blandly ignored or dissolved only in laughter. If nothing else, the spoilt votes which on 2-6-88 amounted to 10.82 per cent of the votes cast make one of two factors clear Either the voters were ignorant of the voting system or lashed out in rage at the prevailing situation In any event, the number of spoilt votes in *Colombo* (61 124) the number in *Gampaha* (46, 466) and the number in Kandy (48, 504) — places which cannot be juxtaposed with a district like Nuwara Eliya — constitutes a seamy and sordid tale in our political annals

**Means and Ends**

As we go to print, EROS is active, organising non violent protests against the wanton destruction of human life and calling for an immediate cease-fire and a return to the negotiating table. The national dailies have also spotlighted the PEACE moves in which the Indian Research and Analysis Wing (RAW) is involved, with the LTTE in working out a scheme of Compromise if the LTTE is given a prominant role in the interim government administration

But these are all yet on the cards The Indian Defence Minister in his answers to questions put by the Press, is reported to have said that the overriding concern of India is not fighting with individual militants but with achieving the '*cause*'.

But if the 'cause' is to prosper, all reason and logic and history point to an immediate cessation of using any means grossly disproportionate to the ends sought

*Reminiscences*

### Mr. E. V. Ponnuthurai

My first acquainstance with Mr. Ponnuthurai was under very happy auspices. As a student at Jaffna College I was one of those in the College choir which was invited to 'perform' at the Wedding Service of Mr. Ponnuthurai at the Vaddukoddai Church.

We were in our, places on time. It was an all male voice choir as there were no girls in Jaffna College at that time. Mr. R C. S. Cooke, then a young member of the Staff directed the singing. Mrs. Nellie Bicknell wife of the Principal with spectacles running down her was in the chior (if I remember right), occasionally making us feel that she was also in overall charge of our discipline.

The bride was no stranger to us. She was a sister of a classmate of ours Nallaratnam. Her house at *Cheddiamadam* was not far away from the College.

With this happy backdrop began my association with Mr. Ponnuthurai when I took up residence years later at Tellippalai. My house where I lived for some two decades, was opposite to Mr S. J. V. Chelvanayakam's house at *Barr Lane*, (nomed after Maniagar Barr Kumarakulasinghe, the father-in-law of Mr. Chelvanayakam).

On days which Mr. Chelvanayakam had set apart to meet his constituents at his home in Barr. Lane, Mr. Ponnuthurai had an exacting schedule. He called at Barr Lane early in the morning. He looked after his brother's needs meticulously, and more importantiy had to be a liaison between the M. P. and the constituents. The reealcitrant ones had to be pacified the deserving cases had to be satisfied and party VIPs had to be received with deference. To cap all, care had to be taken to see that the MP's energy and staying power are not stretched beyond a point which would endanger his health. In this herculean task of keeping the constituents in good humour and organising his brother's tight schedule, Senator S. Nadarajah of Mallakam, of revered memory, was Mr. Ponnuthurai's trusted ally. Both of them left a recognisable print in the life of the community as leaders who made the common 'mans' contact with Mr. Chelvanayakam easier and free of unnecessory impediments.

As Bishop Ambalavanar in his tribute at the Funeral Service put it, Mr. Ponnuthurai's services to the community were as unnoticed and unglamorous but nevertheless crucial as the man in the Bible who lent his colt to the Master for his Triumphal Entry into Jerusalem or the boy who offered the five loaves and two fishes to feed the Five Thousand.

Mr. Ponnuthurai was in the forefront of a supporting cast which enabled his brother, Mr. Chelvanayakam, to make his life and work a source of strength and hope to the Tamil community at a time of uncertainty and turbulence.

### The Jaffna Inter Collegiate Christian Fellowship

**TERMINAL FELLOWSHIP MEETING**

The terminal meeting of the J. I. C. C. F was conducted in Henry Peto Hall at St. Johns College Jaffna on Friday the 3rd of June. One hundred and seventy students from St Johns College, Chundikuli Girls College Jaffna College, Uduvil Girls College, Jaffna Central College, Vembadi Girls High School, Institute for Evangelists and Lay training and the University of Jaffna participated.

Rev. C. T. Roberts in his opening address said that J. I. C C. F was the most important Christian Youth Organization in the North. It produced eminent Christian leaders like Dr. D T. Niles, Sevak Selvaratnam and Rt. Rev. Dr. S. Kulandran It is part of the World Student Christian Federation and the Christian Conference of Asia In these days of uncertainty and frustration the J I C C F. should give the right direction to the Youth of the North

S. C. M units of Uduvil Girls College, Jafina College, St Johns College I. E. L. T. and Chundikuli Girls College gave items for the variety entertainment which followed the opening meeting.

The following were elected Office-bearers for the 1988–89 year.

Senior President: Dr. S. Jebanesan (Jaffna College).

Vice President: Mr. J. N. Ponniah (St. Johns).

Secretary: Rev. Christo Roberts (I. E. L. T.).

Treasurer: Mrs. K. P. Govindaraj (Vembadi).

Student President: Mas. S, E. Niranjan (St. Johns).

Student Vice President: Miss Devika Devendra (Uduvil Girls College).

Student Treasurer: Mas. P. Devanandhan (Jaffna College).

REPRESENTATIVES:

Chundikuli Girls College: Miss Luckshantha Thiagarajah.

Vembadi Girls High School: Miss Jessy John.

Uduvil Girls College: Miss Evelyn Thanarajasingham.

Jaffna Central College: Mas. P. Yogendran.

St. Johns College: Mas J. Rajaratnam.

Jaffna College: Mas. S. Vijayakumar.

I. E. L. T.: J. Thevarulselvam.

Jaffna University: Mr. P. Jeyakumar.

The closing service was led by the Rev. G D Anandarajan. Chaplain University of Jaffna. In his message he urged, the Youth of the North to make the J. C. C. F. a true Christian Fellowship of College students.

Rev. C T Roberts thanked Mr J N. Ponniah the Vice Principal of St. Johns College for providing the refreshments and arranging the hall.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QIJ/64/News/87.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 10th June 1988 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna